# கிராமிய சேவைத் திட்டம்

***ஈரோடு மண்டலம்***
***ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை***
***46 புதூர் கிராமம்***




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# ஈரோடு மண்டலம்
# ஈரோடு மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# *46 புதூர் கிராமம்*

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை....3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....4

4. 46-புதூர் கிராமத்தின் தொடக்கவிழா....5

5. மருத்துவ முகாம் ....7

6. மனநல ஆலோசனை முகாம்....7

7. ஆரோக்கிய மேம்பாட்டு வழிப்புணர்வு முகாம்....7

8. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்....8

9. சர்வதேச யோகா தினம்....8

10. அனுபவ உரை ....9

11. எதிர்காலத் திட்டங்கள்: ....15

12. வாழ்த்து:....15

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | *46 புதூர்* | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | 24-12-2023 | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | 26.09.2024 | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | 7 மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | ஈரோடு | | |
| 6. | அறக்கட்டளை | ஈரோடு | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:312* | *பெண்:354* | *மொ:666* |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | *ஆண்:230* | *பெண்:292* | *மொ:522* |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | *ஆண்:230* | *பெண்:292* | *மொ:522* |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | *ஆண்:229* | *பெண்:290* | *மொ:519* |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:65* | *பெண்:165* | *மொ:230* |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:63* | *பெண்:160* | *மொ:223* |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:60* | *பெண்:158* | *மொ:218* |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:24* | *பெண்:61* | *மொ:85* |
| 16. | ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் | *ஆண்:07* | *பெண்:19* | *மொ:26* |
| 17. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)* | *ஆண்:26* | *பெண்:21* | *மொ:47* |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

*பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.*

*அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை* SKY *யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.*

*மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்* ***பத்மஸ்ரீ.அருள்நிதி.*****SKM.*****மயிலானந்தன்*** *அவர்களால்* **317**-*வது கிராமமாக* ***46-புதூர்*** *கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.*

*இக்கிராமத்தில்* **24.12.2023-***ஆம் தேதியிலிருந்து* **26.09.2024-***ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.*

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- *நோயற்றவாழ்வு*
- *குடும்பஅமைதி*
- *முதியோரைபாதுகாத்தல்*
- *கல்வியில்மேன்மை*
- *சுற்றுப்புறசுகாதாரம்*
- *சமுதாயவிழிப்புணர்வு*
- *மதநல்லிணக்கம்*
- *மனிதநேயம்*

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. *46-புதூர் கிராமத்தின் தொடக்கவிழா*

***Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited* அவர்களின்** *நிதி உதவியுடன்* ***ஈரோடு மண்டலம்****,* ***ஈரோடு மனவளக்கலை*** *மன்ற அறக்கட்டளை சார்பாக* ***24-12-2023*** *-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* **பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM. மயிலானந்தன்** *அவர்களால் உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* ***46-புதூர்*** *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*









**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**











## 5. மருத்துவ முகாம்

**27.02.2024** *அன்று 46 புதூர் கிராமத்தில்* ***Government Primary Health Centre*** *மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-67, பெண்கள்-80, மொத்தம்-147 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 6. மனநல ஆலோசனை முகாம்

*20.05.2024 & 11.05.2024 ஆகிய தேதிகளில்* **டாக்டர். ரமேஷ்** *அவர்களால் 46 புதூர் கிராமத்தில்* **மன நல ஆலோசனை முகாம்** *நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் 69 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 26 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





## 7. ஆரோக்கிய மேம்பாட்டு வழிப்புணர்வு முகாம்

*27.03.2024 அன்று திரு. ஜெகதீசன் AAA அவர்களால் 46 புதூர் கிராமத்தில் மது ஒழிப்பு முகாம் நடத்தப்பட்டது. இதில் கிராமப் பொது மக்கள் 46 அன்பர்கள் கலந்து கொண்டனர்.*





## 8. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

*20.03.2024 அன்று 46 புதூர் கிராமத்தில் ஈரோடு அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்களுக்கு 210 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. மேலும் கிராம மக்களுக்கு 200 குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டது.*






## 9. சர்வதேச யோகா தினம்

*21.06.2024 அன்று 46 புதூர் கிராமத்தில் சர்வதேச யோகாதினம் சிறப்பாக நடைபெற்றது. இதில் மாணவர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*





10.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 96% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 2 | Around 93% of the participants are able to remember things |
| 3 | 93% of the participants are satisfied with their children education and attitude |
| 4 | Around 92% of the participants are able to moralize their desire to be contented |
| 5 | Around 91% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 6 | Around 88 % of the participants are out of the depression compared to before joining the program |
| 7 | 83% (555) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation- 289 participants cured of Joint pain, 200 participants cured of Sugar Problem, 133 participants cured of Eye problem with respect to sight, watering eyes, 111 participants cured of Migraine and Headache, 111 participants cured of Blood Pressure, 111 women participants cured of Menstrual Problem (PCOD). |
| 9 | **Around 96% of the participants are happy with the VSP Programme compared to only 25% before joining the program** |

## Feedback Trend



உ

விடுநர் :- V.T. சுப்பிரமணியன்
அண்ணா நகர், கோவை-2
46 புதூர்.



வாழ்க வையகம். xxx வாழ்க வளமுடன்

நான் மனவளக்கலை யோகாவை பயிற்சிக்கு எடுத்து வந்து முன்னால் ஐயா திரு பக்கிரி செல்வம் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பட்டைய கிளைக்கு போக இந்த எனது மனவளக்கலை யோகா மேலும் உடல்நலமும் மனவளமும் பெற்று. அதிலே தெளிவுற்று மனநிறைவுடன் வாழ வழி கிட்டியது. பல சந்தேகம், கேள்விகள் அனைத்தும் கொடுத்த ஐயா திரு பக்கிரி செல்வம், அதேபோல் அறிவு திருக்கோவிலில் பணிபுரியும் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி ஐயா, மற்றும் திரு ... ஐயா அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன். என் மனைவி மனவளக்கலையில் தவம் ஆசனம் எடுத்து வருகிறாள்.

நாம்பிடி தொண்டும் பல நோயில் இருந்து விடுபடவில்லை. ஆனால் இந்த மனவளக்கலை யோகாவால் நோயில் இருந்து விடுபட்டோம் பலர் என் நண்பர் எதிரில் நடப்பி. என்னுடன் ஏற்பட அனுபவம் கடந்த ஆறு உறவுகளும் மனைவி என் வாழ்க்கை. இறைவி தொண்டும் தொடர்கின்ற நான் பெற்ற இன்பம் பெறுக வையகம். இந்த பேறின் பத்தினி, ஐயா மகரிஷி அவர்களின் இந்த யோகா, தியானம் பல அனுபவ பயிற்சியாளர்களுக்கு இயற்கை ஏற்படுத்தி உள்ளது அன்புதான் உண்மை. தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்
V.T. சுப்பிரமணியன்

வாழ்க வையகம் வாழ்க வளமு



குரு வாழ்க குருவே துணை

திருமதி. B. சரஸ்வதி,
46 புதூர்,
ஈரோடு -2.

எங்கள் ஊரில் நடைபெற்ற "கிராமிய சேவை திட்டத்தில்" மூன்று பேர் (நான், கணவர், மகன்) ஆறு மாதமாக மனவளக்கலை பயின்று வந்தோம். நான் ஏற்கனவே ஆளியாறிலும் (Foundation Course), ஈரோடு அறிவுத் திருக்கோயிலிலும் (அகத்தாய்வு I, II, III) கற்றுக் கொண்டேன். எனக்கு நிறைய சந்தேகங்கள் இருந்தன. அவையெல்லாம் பேராசிரியர்கள் நன்றாக சொல்லிக்கொடுத்ததால் தெளிவாகின.

கண்ணில் புரை இருந்தது. நான் கண்பயிற்சி செய்ததால் மருத்துவர் இப்பொழுது அறுவை சிகிச்சை தேவை இல்லை நன்றாகப் புரை குறைந்துள்ளது என்றார்.

காலில் முட்டி வலி இருந்தது தினமும் உடற்பயிற்சி செய்வதால் குறைந்துள்ளது. மேலும் சர்க்கரை அதிகமாக இருந்தது அதுவும் குறைந்துள்ளது.

இந்தக் "கிராமிய சேவைத் திட்டம்" எல்லா கிராமங்களுக்கும் சென்று சேர வேண்டும். எல்லா மக்களும் பயன் பெற வேண்டும். நல்ல ஆரோக்கியத்துடன் அனைவரும் நலமுடன், வளமுடன் வாழ வேண்டும். வாழ்க்கையில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெற்று

இந்தத் திட்டம் சீரும், சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த, தோன்றின் புகழொடு தோன்றிய SKM குடும்பத்தினருக்கும் கோடானு கோடி நன்றிகள். சந்திரசேகரன் ஐயா அவர்கள் பேரோடும், புகழோடும் பல்லாண்டு, பல்லாண்டு பல கோடி நூறாண்டு வாழ வாழ்த்துக்கள்.

வாழ்க வையகம்! வாழ்க வையகம்! வாழ்க வள

வாழ்க வளமுடன்



P. மோகனப்ரியா

46 புதூர்

ஈரோடு

நான் 46 புதூரில் வசித்து வருகிறேன். நான் IT job-ல் பணி புரிந்து கொண்டிருந்த பொழுது எனது உடல் சீராக இல்லை. முதுகு வலி, கால் வலி, கண் வலி போன்ற பிரச்சனைகள் இருந்தது. பணியில் இருந்து வெளியேறி வீட்டில் இருக்கும் பொழுது, மனவளக்கலை யோகா பயிற்சியை பற்றி தெரிந்து. நானும் அதில் கலந்து கொண்டேன். குடும்பத்திலும் மன அமைதி இல்லாமல், மன அழுத்தத்துடன் இருந்தேன். என்ன செய்வது என்று தெரியாமல், தொடர்ந்து 6 மாத காலமாக உடற்பயிற்சி மற்றும் தவத்தில் ஈடுபட்டேன். இத்துடன் அகத்தாய்வு செய்து, எனது பிரச்சினைகளை நான் நன்கு அறிந்தேன். இப்பொழுது, என் உடல் சீராக உள்ளது மற்றும் மனமும் அமைதியாகவும். மகிழ்ச்சியுடனும் இருக்கிறது. என் மன உறுதியும் அதிகமாகி இருப்பதை என்னால் உணர முடிகிறது. எனது முதல் நன்றியை வேதாத்திரி மகரிஷி ஐயா அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். எங்கள் கிராமத்திற்கு மனவளக்கலை யோகா பயிற்சியை அறிமுகப்படுத்தி அனைவரையும் மகிழ்வித்த திரு. சந்திரசேகர் SKM ஐயா மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு நன்றி வாழ்க வளமுடன்!. அதே போல், இப்பயிற்சியை, முழுமையாகவும், மிகவும் பொறுமையுடனும் கற்றுக் கொடுத்த திரு. பன்னீர் செல்வம் மற்றும் திருமதி. விஜயராணி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி! வாழ்க வளமுடன்!.

குரு வாழ்க! குருவே துணை! வாழ்க வளமுடன்!

Scanned by CamScanner

"வாழ்க வையகம்" "வாழ்க வளமுடன்"

"குரு வாழ்க
குருவே துணை"



R. மேனகா
46, 4தார்
ஈரோடு

நான் 46 4தார் (RainBow) நகரில் வசித்து வருகிறேன். கடந்த ஆறு மாத காலங்களாக மனவளக்கலை மன்றத்தில் திரு. S.K.M. சந்திரசேகர் ஐயா அவர்கள் மூலமாக இந்த எளிமையான பயிற்சி மற்றும் தவம், அகத்தாய்வு கற்று வருகிறேன். இதன் மூலம் நான் உடல் ரீதியாக பல நன்மைகளைப் பெற்றுள்ளேன். கடந்த 14 வருடங்களாக இருந்த மூலசிக்கல் (Piles) பிரச்சனை முற்றிலும் சீர் ஆகி சரியாகி உள்ளது. உள்ளது. மேலும் நீர்கட்டி பிரச்சனை இந்த மனவளக்கலை உடல் எடையை குறைத்து உள்ளேன். ஏதோ ஒரு வாழ்க்கை மன்றத்திற்கு வருவதற்கு முன்னால் பல மன கோபம், அச்சம், கவலை, ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பேன். இந்த ஆறு நேரம் மனச் சோர்வுடன் மாதக் கால பயிற்சி பெற்ற பிறகு எனக்குள் தன்னம்பிக்கை, அமைதியான தூக்கம், அளவாக உண்ணுதல், எதையும் சிந்தித்து செயல்படுதல், வாழ்வின் நோக்கம் அனைத்தையும் பெற்றுக்கொண்டேன். எனக்குள் இவ்வளவு மாற்றம் சக்தியினை (இறைநிலை) உணர்ந்து கொண்டேன். இந்த பயிற்சியை கற்றுக்கொடுத்த ஆசானாகிய, தேவாகிய ஐயா மற்றும் அம்மா அவர்கள், "வாழ்க வளமுடன்"
"நானும் என் அன்பு குடும்பத்தாரும் நித்தம் மகிழ்ச்சி அடைகிறோம்". | "வாழ்க வளமுடன்" வாழ்க வளமுடன்"

Scanned by CamScanner

2

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



குரு வாழ்க குருவே துணை

சி.ரவி,

15-1 அன்னை நகர்,

46, புதூர், ஈரோடு-2

உலக சமுதாய சேவா சங்கத்தின் கிராமிய சேவை திட்டத்தில் 46-புதூர் பயிற்சி மையத்தில் நான் எனது மனைவி ர.ராஜேஸ்வரி, எனது மகள் ர.சிபியா ஆகிய எனது குடும்பத்தினர் பல அற்புத பலன்களையும் நன்மைகளையும் அடைந்துள்ளோம். அதற்காக மதிப்பிற்குரிய SKM ஐயா அவர்களுக்கும் அவரது அன்பு குமாரர் திரு.சந்திரசேகர் அவர்களுக்கும் மிக சிறப்பாக பயிற்சியையும் நல் வழிகாட்டுதல்களையும் கற்பித்த எங்கள் பேராசிரியர்களுக்கும் வணக்கங்களையு நன்றிகளையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் கடந்த 6 மாத காலமாக தொடர்ந்து பயிற்சியும், தவமும் செய்வதால் எனக்கு இருந்த அஜீரண கோளாறு, கண் பார்வை, உடல் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளது, என் மனைவிக்கு இருந்த இடுப்பு வலி, முதுகு வலி, கண் பார்வை சரியாகியுள்ளது.

எங்கள் பேராசிரியர்களின் வாழ்த்துக்களும், எங்களுடைய குழந்தைகளும் மிகவும் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் உணர்கிறார்கள். உலக சமுதாய சேவா சங்கம் மற்றும் கிராமிய சேவை திட்டத்தின் கீழ் உலகில் அனைத்து மக்களும் உழைத்துண்டு வளம் காத்து வாழ ஆசான் அருட் தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களை மனதில் நினைத்து பிரார்த்திக்கிறேன்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

இப்படிக்கு

சி.ரவி

Scanned by CamScanner

## 11. எதிர்காலத் திட்டங்கள்:

*ஆரோக்கியமும், அமைதியும் மிக்க **46-புதூர் கிராமம், ஈரோடு மனவளக்கலை** மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.*

## 12. வாழ்த்து:

***46-புதூர்*** *கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* ***பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன்*** *அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய **Dr.M.Chandrasekar, SKM Animal feeds and Foods Private Limited அவர்களுக்கும்,** இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த **ஈரோடு மண்டல** பொறுப்பாளர்களுக்கும், **ஈரோடு மனவளக்கலை** மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் **Prof.K.Paneerselvam & Prof.P.Vijayarani** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய **VSP நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு** உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.*

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*